


# எல்.எல்.ஆர்.சீ. அறிக்கை பற்றிய கருத்துக் கணிப்பு

**கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தவர்களினதும், LLRC தொடர்பான செயலமர்வுகளில் பங்குபற்றியோரினதும் கருத்துக்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# எல்.எல்.ஆர்.சீ.

# அறிக்கை பற்றிய

# கருத்துக் கணிப்பு

கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தவர்களினதும், LLRC தொடர்பான செயலமர்வுகளில் பங்குபற்றியோரினதும் கருத்துக்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

**ISBN:** 978-955-4746-05-3

**முதற்பதிப்பு:** 2013 ஏப்ரல்

**அச்சுப் பதிப்பு:** க்ளோப் பிரின்டிங் வேர்க்ஸ், தொ.பே: +94(11)2689259

**பக்க வடிவமைப்பு:** கமலாதேவி சசிசந்திரன்

Friedrich Naumann STIFTUNG FÜR DIE FREIHEIT

பெட்ரிக் நியூமான் மன்றத்துடன் (FNF) இணைந்து இப்பிரசாரம் வெளியிடப்படுகின்றது. சுதந்திரம் பொறுப்புடைமை என்பவற்றின் விழுமிய மதிப்பீட்டுடன் இம் மன்றத்தின் நடவடிக்கைகள் குவிமையப்படுத்தப்பட்டுள்ளன. புதிய கருத்திட்டங்களின் ஊடாகா பெட்ரிக் நியூமான் மன்றம் (FNF) அனைத்து மக்களின் சுதந்திரம், மானுட மாண்பு என்பவற்றுடன் சமாதானமாக வாழக்கூடிய உலகை சிருஷ்டிப்பதற்கு பங்களிப்பு செய்கின்றது. இப்பிரசுரத்தின் உள்ளடக்கம் பற்றிய வகைப்பொறுப்பு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தைச் சாரும்.

CPA

Centre for Policy Alternatives
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக அரசாங்கம், முரண்பாடுகளைத் தீர்த்தல் அதனுடன் இணைந்த முரண்பாடுகள் மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும் 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்களின் கொள்கை விமர்சன ரீதியாக விமர்சிக்கப்படல், மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

| | |
|---|---|
| விலாசம் | : *24ஃ2, 28வது ஒழுங்கை, ப்ஃளவர் வீதி, கொழும்பு - 07* |
| தொலைபேசி | : *+94(11) 2565304/5/6* |
| ஃபக்ஸ் | : *+94(11) 4714460* |
| இணையதளம் | : *www.cpalanka.org* |
| மின் அஞ்சல் | : *info@cpalanka.org* |

# உள்ளடக்கம்


எல்.எல்.ஆர்.சீ. அறிக்கை
தொடர்பான கருத்துக் கணிப்பு ------------------------------------5

I. எல்.எல்.ஆர்.சீ. தொடர்பான பொதுமக்களின்
கருத்துக் கணிப்பு / முறைமையியல் -------------------------7

II. LLRC சாட்சியங்கள் பற்றிய அளவீடு --------------------------9

III. கொழும்பின் விசாரணைகள் -------------------------------------19

IV. LLRC செயலமர்வுப் பங்கெடுப்பாளர் அளவீடு--------------36

V. இணைப்பு -------------------------------------------------------------41

# எல்.எல்.ஆர்.சீ அறிக்கை தொடர்பான கருத்துக் கணிப்பு

விடுதலைப் புலிகளை, யுத்த ரீதியாக தோல்வியுறச் செய்ததன் பின்பு இனப்பிரச்சினைக்கு நிலைபேறான தீர்வைக் கண்டறியும் குறிக்கோளுடன் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு (எல்.எல்.ஆர்.சீ) நியமிக்கப்பட்டது. இவ்வாணைக்குழு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக பொது மக்கள் மத்தியில் ஒரு கலந்துரையாடலை, ஏற்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை காரணமாக, இது தொடர்பான தவறான கருத்துக்கள் சமூகமயப்படுத்தக்கூடிய ஆபத்து உருவாகியது.

எனவே, பொதுமக்கள் மத்தியில் ஒரு கலந்துரையாடலை உருவாக்கி, எல்.எல்.ஆர்.சீ அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட முக்கிய பரிந்துரைகளை அமுலாக்குவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்கும் நோக்குடன், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் இச்சந்தர்ப்பத்தில் இடையீடு செய்தது.

இதற்கமைய, அன்று சிங்களத்திலும் தமிழிலும் எல்.எல்.ஆர்.சீ அறிக்கையின் பரிந்துரைகள் மக்கள் மத்தியில் பகிரங்கமாக வெளியிட நிலையில் மேற்படி பரிந்துரைகளின் 9வது அத்தியாயம், சரளமான சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்த்து, வெளியிட்டு வைப்பதற்கு, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நடவடிக்கை எடுத்தது.

அதே சமயம், இலங்கையின் அனைத்து மாவட்டங்களும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய வகையில், 48 சிவில் சமூக அமைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 48 பயிற்றுவிப்பாளர்கள் ஐந்து நாள் செயலமர்வினூடாக, பயிற்றப்பட்டனர். பின்னர், குறைந்த பட்சம் ஒரு பயிற்றுவிப்பாளர் 20 - 30 செயலமர்வுகளை நடத்தினார். இதற்கமைய இலங்கையில் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையினர் எல்.எல்.ஆர்.சீ பரிந்துரைகளைப் பற்றி அறிந்துகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மாவட்ட மட்டத்தில் 22 கருத்தரங்குககள் இடம்பெற்றன. சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா தொகுத்த எல்.எல்.ஆர்.சீ பரிந்துரைகள் பற்றிய பிரசுரமும் எல்.எல்.ஆர்.சீ பரிந்துரைகள் பற்றிய சமாதான நோக்கு சஞ்சிகையும் (மொத்தம் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் பிரதிகள்) நாடு பூராவும் விநியோகிக்கப்பட்டன.

எல்.எல்.ஆர்.சீ ஆணைக்குழுவின் முன்னே சாட்சியமளித்தவர்களில் தெரிவுசெய்யப்பட்ட சிலரின் கருத்துக்களைக் கணிக்கும் நோக்குடன் ஓர் ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் “சோஷல் இன்டிகேட்டர்” என்ற பிரிவு தயாரித்த வினாக்கொத்தும் விநியோகிக்கப்பட்டது.

வட மாகாணத்தில் சாட்சியமளித்த 25 பேரும் கொழும்பு மாவட்டத்திலிருந்து சாட்சியமளித்த 25 பேரும் இவ்வாய்வுகளின் போது பங்குபற்றினர். அதே சமயம், செயலமர்வுகளில் பங்குபற்றிய ஆட்கள் மத்தியில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 1500 பேரும் இவ்வாய்வின் பங்காளர்களாகச் செயற்பட்டனர். வினாக்கொத்தினூடாகப் பெறப்பட்ட தரவுகள் “சோ‘ல் இன்டிகேட்டர்” பிரிவின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு எல்.எல்.ஆர்.சீ. பற்றிய கருத்துக் கணிப்பு என்ற தலைப்பில் வெளியிடப்படுகிறது.

இது பற்றிய சமூகக் கருத்து, இன மோதல்கள் அற்ற சகவாழ்வு என்பவற்றை மதிக்கும் ஒரு தேசத்தை உருவாக்குவதன் முக்கியத்துவம், அதற்கான தடைகள், என்பன பற்றிய அபிப்பிராயங்கள் இவ்வறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு எமக்கு அனுசரணை வழங்கிய ஃபெட்ரிச் நியுமான் ஸ்டிஃப்ற்றுங் (FNST) நிறுவனத்தின் திருமதி சாகரிக்கா தெல்கொட உட்பட்ட குழுவினருக்கும், இச்செயற்பாட்டை வெற்றிகரமாக அமுலாக்குவதற்கு எமக்கு வழிகாட்டிய மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அவர்களுக்கும், நாம் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் இக்கருத்துக் கணிப்பை தயாரித்த சோ‘ல் இன்டிகேட்டர் பிரிவினருக்கும், அனைத்து பயிலுநர்களுக்கும் பல்வேறு மட்டங்களில் உதவி செய்த அனைவருக்கும் எமது நன்றியும் பாராட்டுதல்களும் உரித்தாகட்டும்.

**லயனல் குருகே**
இணைப்பாளர்
சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித்திட்டப் பிரிவு
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# I

# எல்.எல்.ஆர்.சீ தொடர்பான பொதுமக்களின் கருத்துக் கணிப்பு

## முறைமையியல்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (Lessons Learnt and Reconciliation Commission - LLRC) அறிக்கை பற்றிய கருத்தினைப் பெறுமுகமாக, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (Centre for Policy Alternatives - CPA) அளவீட்டு ஆராய்ச்சி அலகான சோஷல் இன்டிகேட்டரினால் (Social Indicator) ஓரளவு கட்டமைக்கப்பட்ட இரு கேள்விக்கொத்துக்கள் வடிவமைக்கப்பட்டன. LLRCஇன் முன் சாட்சியமளித்தவர்களுக்கும் (LLRC சாட்சியங்கள் பற்றிய அளவீடு) மற்றும் CPAஇன் வெளிக்கள அலகினால் நடத்தப்பட்ட LLRC விழிப்பியல் செயலமர்வுகளில் பங்கெடுத்தவர்களுக்குமே இந்தக் கேள்விக் கொத்துக்கள் விளங்கின.

அறிக்கையின் உள்ளடக்கத்தின் விழிப்பியலையும், LLRC பற்றிய அவர்களது எதிர்பார்ப்புக்கள் எந்தளவுக்கு உள்ளது என்பதையும், அறிக்கையினதும், விதந்துரைப்புக்களினதும் மீதான கருத்தினையும் அத்துடன் செயல் திட்டத்தின் அமுலாக்கத்தையும் அனுமானிப்பதற்கு சாட்சியமளித்தவர்களுக்கான கேள்விக்கொத்து முயற்சித்தது. LLRC விதந்துரைப்புக்களினதும், அரசாங்கச் செயல் திட்டத்தினதும் மீது பதிலிறுப்பாளரின் கருத்தினையும் அத்துடன் அந் நடைமுறையில் அமுலாக்கத்தினதும், முக்கிய செயற்பாட்டாளர்களினதும் மீது அவர்களது எண்ணங்களையும்

செயலமர்வுப் பங்கெடுப்பாளர்களுக்கான கேள்விக் கொத்து நோக்கியது.

சுயமாக நிருவகிக்கப்பட வேண்டிய கேள்விக்கொத்துக்கள் சிங்களத்திற்கும், தமிழுக்கும் மொழி பெயர்க்கப்பட்டன. ஆணைக் குழுவுக்கு சாட்சியங்களை அளிப்பதற்கு முன்வந்ததும், சாட்சியளித்ததுமான தாபனங்களையும், தனிப்பட்டவர்களையும் தனித்தனியாக சந்தித்து கேள்விக்கொத்துக்கள் வழங்கப்பட்டதுடன், அவை முடிக்கப்பட்டவுடன், வெளிக்கள அலகுக்கு மீளளிக்கப்பட்டன. செயலமர்வின் இறுதியில் சகல பங்கெடுப்பாளர்களுக்கும் கேள்விக்கொத்தை நிரப்புவதற்காக கேள்விக்கொத்து பங்கிடப்பட்டது.

LLRCஇன் முன் சாட்சியமளித்தவர்களுக்கான கேள்விக்கொத்து 47 பதிலிறுப்பாளர்களினால் பூரணப்படுத்தப்பட்டது. நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் செயலமர்வுகள் நடைபெற்றதனால், செயலமர்வுப் பங்கெடுப்பாளர்களின் பூரணப்படுத்தப்பட்ட 60 கேள்விக்கொத்துக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் எழுந்தமானரீதியில் தெரிவுசெய்யப்பட்டன. இது செயலமர்வு பங்கெடுப்பாளர் அளவீட்டுக்கான மாதிரியை 1,440 என ஆக்கியுள்ளது. தரவுத் தளமொன்றினுள் இரு அளவீடுகளிலிருந்தும் தரவுகள் பதிவுசெய்யப்பட்டவுடன், சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரப் பொதியைப் பயன்படுத்தி தரவுகள் பகுப்பாயப்பட்டன.

# II

## LLRC சாட்சியங்கள் பற்றிய அளவீடு

### வெளிக்கள வருகைதரல்கள்

LLRC வெளிக்கள வருகைதரல் விசாரணைகளில் சாட்சியமளித்த 22 பேரின் கருத்துக்களே பின்வருவனவாகும். அவர்களது தற்போதைய வதிவிட மாவட்டங்கள் மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகும். சகல 22 பதிலிறுப்பாளர்களும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களாவர்.

***LLRCஇலிருந்து விழிப்பியல் மற்றும் எதிர்பார்ப்புக்கள்***

LLRC மற்றும் அதன் குறிக்கோள் ஆகியன பற்றிய பதிலிறுப்பாளரின் அறிவு அனேகமாக குறைவானதாகும். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் விழிப்பியல் போதுமானதல்ல என்றும், பெரும்பான்மையிலான மக்கள் LLRCஐப் புரிந்துகொள்ளவில்லை என்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் பதிலிறுப்பாளர் ஒருவர் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்.

யுத்தத்தின் போது காணாமல் போனவர்கள் அல்லது கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் ஆணைக்குழு பதில்களை

அளிக்கும் என அவர்கள் நம்பியதன் காரணமாகவே LLRCஇல் அவர்களின் பெருமளவு அக்கறை விளங்கியது என்பது கண்கூடானதாகும்.

LLRC பற்றி முதலில் எவ்வாறு கேள்விப்பட்டார்கள் எனக் கேட்கப்பட்ட போது, ஊடகங்கள் ஊடாக தாம் கேள்விப்பட்டதாக 20 பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தார்கள். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வொன்றைக் கண்டறிவதே LLRCஇன் நோக்கம் என 3 பேர் கூறிய அதேவேளை, தீர்வொன்றைக் கண்டறியும் காரணத்திற்காக உருவாக்கப்பட்ட குழுவே அதுவாகும் என மேலும் 3 பேர் தெரிவித்தனர். இக் கேள்விக்கு 6 பதிலிறுப்பாளர்களினால் பதிலளிக்கப்படவில்லை. பதிலளித்த ஏனையோர் பின்வரும் பதில்களை அளித்தனர் -

- *30 வருட இனத்துவ மோதலின் அடிப்படைக் காரணிகளை கண்டறிவதற்காகத் தாபிக்கப்பட்ட ஓர் ஆணைக்குழு (2)*
- *விசாரணையின்றி கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்கு தாபிக்கப்பட்ட ஓர் ஆணைக்குழு (2)*
- *இனத்துவ மோதலுக்கான தீர்வொன்றைக் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஓர் ஆணைக்குழு*
- *யுத்தத்தின் காரணமாக காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டவர்களைக் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஓர் ஆணைக்குழு*
- *நாட்டில் எந்நேரத்திலும் நிகழக்கூடிய மொழிப் பிரச்சனைகளைத் தீர்த்துவைத்து, அவ்வாறாக இனத்துவ மோதலைத் தீர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட ஓர் ஆணைக்குழு*

LLRC பற்றிய செய்திகளுக்கும், செய்திக்குறிப்புகளுக்குமான தகவலின் ஆரம்பநிலையிலான மூலங்களாக செய்திப் பத்திரிகைகளும், வானொலியும் விளங்குகின்றன. செய்திப்பத்திரிகைகள் என கூறிய 10 பதிலிறுப்பாளர்கள் *தினக்குரல், வீரகேசரி* மற்றும் *உதயன்* ஆகியவற்றை குறிப்பிட்ட அதேவேளை, தமது ஆரம்பநிலையிலான மூலம் வானொலி எனத் தெரிவித்த 11 பதிலிறுப்பாளர்கள் உதாரணங்களாக *சக்தி எஃப்.எம்., சூரியன் எஃப்.எம்., வசந்தம் எப்.எம்.* மற்றும் *பீ.பீ.சி* ஆகியவற்றைக் குறிப்பிட்டனர்.

தமது சாட்சியத்தை அவர்கள் அளித்த போது பதிலிறுப்பாளரின் எதிர்பார்ப்புக்கள் எவை? யுத்தத்தின் போது காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டவர்கள் தொடர்பில் தாம் பதில்களை எதிர்பார்த்ததாக LLRCக்கு சாட்சியமளித்த 22 பதிலிறுப்பாளர்களில் 12 பேர் குறிப்பிட்டனர். நீதியை நாடுவதற்கு அவர்கள் விரும்பியதே காரணமாகும் என 3 பேர் தெரிவித்ததுடன், கைது செய்யப்பட்டவர்கள் விடுவிப்பதை பார்ப்பதை தாம் எதிர்பார்ப்பதாக 2 பேர் தெரிவித்தனர். இக் கேள்விக்கு பதிலளித்த 2 வேறு தனிப்பட்டவர்கள் பின்வரும் பதில்களை அளித்தனர் -

- *யுத்தத்தின் இறுதிக் கட்டங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட தகவலுக்கு ஆணைக்குழு கவனமெடுக்கும்.*
- *மனித உரிமை மீறல்களுக்கு முடிவொன்றைக் கொண்டு வரும்..*

இறுதி LLRC அறிக்கை அவர்களது எதிர்பார்ப்புக்களைப் பூர்த்திசெய்ததா என கேட்கப்பட்ட போது, 20 பதிலிறுப்பாளர்கள் இல்லை என தெரிவித்த அதேவேளை, கேள்விக்கு 2 பேர் பதிலளிக்கவில்லை.


## *1. LLRC அறிக்கை மற்றும் விதந்துரைப்புக்கள்*

இறுதி LLRC அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது என்பதையிட்டு 22 பதிலிறுப்பாளர்களில் 2 பேர் மட்டுமே அறிந்திருந்தனர். சிங்களத்திலும், தமிழிலும் அறிக்கையின் மொழிபெயர்ப்புக்கள் அரசாங்கத்தினால் கிட்டச்செய்யப்படவில்லை என்பதுடன், அறிக்கையின் உத்தியோகபூர்வமான அரசாங்கப் பிரதிகள் ஆங்கிலத்தில் மட்டுமே உள்ளது என்பதை வழங்குகையில் இதை எதிர்பார்க்கத்தான் வேண்டும்.


LLRC பற்றிய அறிக்கையின் அல்லது ஆவணத்தின்/சிற்றேட்டின் பிரதிகளை அவர்கள் எவ்வாறு பெற்றுக்கொண்டார்கள் என கேட்கப்பட்ட போது, மாற்று கொள்கைகளுக்கான நிலையம் என 7 பதிலிறுப்பாளர்கள் கூறினார்கள், தேசிய சமாதானப் பேரவை என 2 பேர் கூறிய அதேவேளை, பின்வரும் நான்கு பதில்களை வேறு 4 பேர் வழங்கினார்கள் - நண்பர் ஒருவரிடமிருந்து, செய்திப் பத்திரிகையிலிருந்து, ஆணைக்குழு அலுவலர் ஒருவரிடமிருந்து.

பின்வரும் கூற்றுக்கள் வழங்கப்பட்டு, அவர்கள் அதிகளவு உடன்படும் கூற்றினைத் தெரிவுசெய்யுமாறு பதிலிறுப்பாளர்களிட மிருந்து கேட்கப்பட்டது.

## வரைபடம் 1 - பின்வரும் எந்த கூற்றுக்களுடன் நீங்கள் உடன்படுகின்றீர்கள்?



***வரைபடம் 2 - LLRC விதந்துரைப்புக்கள் பற்றிய உங்கள் கருத்து என்ன? (ஒரு பதிலுக்கு மேல் தெரிவுசெய்யலாம்)***




விதந்துரைப்புக்கள் நடைமுறையிலானவை என தெரிவித்த பதிலிறுப்பாளர்கள் முக்கியமான பிரச்சனைகளை விதந்துரைப்புக்கள் கவனத்திற்கெடுக்கவில்லை என்பதற்கும், அவை எதிர்பார்ப்புகளுக்கு சற்றுக் குறைவாக விளங்கின என்பதற்குமான பதிலை தெரிவுசெய்தனர். விதந்துரைப்புக்கள் நடைமுறையிலானவை என தெரிவித்த பதிலிறுப்பாளர் ஒருவர் பின்வரும் காரணத்திற்காக அவ்வாறாக நம்பினார்-

- *புனர்வாழ்வு, இராணுவத்தினால் தடுத்துவைக்கப் பட்டுள்ளவர்களை விடுவித்தல், வாழ்வாதாரப் பிரச்சனைகள் போன்ற சில பிரச்சனைகள் அமுல்படுத்தப்பட முடியும்.*

விதந்துரைப்புக்கள் நடைமுறையிலானவை என நம்பிய 4 பதிலிறுப்பாளர்கள் விதந்துரைப்புக்கள் அமுல்படுத்தப்பட முடியும் என்ற போதிலும், அரசாங்கம் நேரத்தை விரயமாக்குவதுடன், அமுலாக்குவதை நோக்கி அர்ப்பணிப்பினைக் கொண்டிருக்க வில்லை எனக் குறிப்பிட்டனர்.

தமது எதிர்பார்ப்புகளுக்கு விதந்துரைப்புக்கள் சற்றுக் குறைவாக விளங்கின, பெருமளவு பிரச்சனைகளைக் கவனத்திற்கெடுக்க வில்லை அல்லது அவற்றைப் போதியளவு கவனத்திற்கு எடுக்க வில்லை எனக் குறிப்பிட்டவர்கள் விளக்கங்களாக பின்வரும் காரணங்களை வழங்கினர்-

- *யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதியளவு தீர்வு வழங்கப்படவில்லை (2)*
- *யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது சிவிலியன்கள் மரணம் தொடர்பிலான தகவலுக்கு போதியளவு கவனம் செலுத்தப்படவில்லை.*
- *வெள்ளைக் கொடிப் பிரச்சனை போதியளவு கவனத்திற்கெடுக்கப்படவில்லை.*
- *வழங்கப்பட்ட சாட்சியம் போதியளவு பின்துரந்து செல்லப்படவில்லை அல்லது வெளியிடப்படவில்லை.*
- *யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெரும்பான்மையானவர்கள் அச்சத்தின் காரணமாக தமது சாட்சியத்தை அளிக்க முன்வரவில்லை. எனவே, அவர்களது உண்மையான பிரச்சனைகளும், தேவைகளும் அறிக்கையில் பிரதிபலிக்கவில்லை.*

- *யுத்தத்தின் அடிப்படைக் காரணிகளை அறிக்கை கவனத்திற்கெடுக்கவில்லை அல்லது மனித உரிமைகள் மீறல் பிரச்சனைகளைக் கையாளவில்லை.*

விதந்துரைப்புக்களில் சில மட்டுமே அமுல்படுத்தப்பட முடியும் எனத் தெரிவித்த ஒரு பதிலிறுப்பாளர் நிருவாகரீதியிலான விதந்துரைப்புக்கள் மட்டுமே அமுல்படுத்தப்பட முடியும் எனக் குறிப்பிட்டார்.

### *2. அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு*

LLRCஇன் விதந்துரைப்புக்களை அமுல்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் முழுமையான அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளது என அவர்கள் எண்ணுகின்றார்களா என பதிலிறுப்பாளர்களிடம் கேட்கப்பட்டது. 'ஆம்' என பதிலிறுப்பாளர்களில் எவரும் கூறவில்லை, இல்லை என 15 பேர் கூறிய அதேவேளை, தமக்கு நிச்சயமில்லை அல்லது தெரியாது என 5 பேர் கூறியதுடன், கேள்விக்கு பதிலளிக்காமல் இருப்பதை 2 பேர் தெரிவுசெய்தனர்.

அரசாங்கம் முழுமையான அர்ப்பணிப்பைக் கொண்டிருக்கவில்லை என ஏன் அவர்கள் நினைக்கின்றார்கள் என்பதையிட்டு விளக்கமளிக்குமாறு கேட்கப்பட்ட போது, மேலே குறிப்பிடப்பட்டுள்ள கேள்விக்கு 'இல்லை' எனப் பதிலளித்த பதிலிறுப்பாளர்கள் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டனர் -

- *விதந்துரைப்புக்கள் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை (5)*

- *யுத்தத்தின் போது கைது செய்யப்பட்டவர்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை (2)*

- *சிவில் யுத்தம் முடிவொன்றுக்கு வந்து மூன்று வருடங்களாகியுள்ள போதிலும், யுத்தத்தின் காரணமாக காணாமல்போனதாக அறிவிக்கப்பட்டவர்கள் தொடர்பிலான தகவல் கரிசனையைக் கொண்டவர்களுக்கு இன்னுமே வெளிப்படுத்தப்படவில்லை (2)*

- *இறுதி அறிக்கை வெளியிடப்பட்டுள்ள போதிலும், வடக்கில் பாரபட்சமான காணி கையகப்படுத்தல், கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் இனத்துவ மோதல்கள் இன்னுமே தொடருகின்றன.*

- *வழங்கப்பட்டுள்ள சாட்சியம் மக்களுக்கு பகிரங்கப்படுத்தப் படவில்லை என்பதுடன், அமுல்படுத்தப்படவும் இல்லை.*

- *யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் கடந்துள்ள போதிலும், சாத்தியமான தீர்வொன்று கண்டறியப்பட வில்லை.*

- *அரசாங்கத்திடமிருந்து பயமுறுத்தல்கள் இன்னுமே தொடருகின்றன.*

### *3. LLRC பற்றிய எண்ணங்கள்*

LLRCஇல் அதிகளவு நம்பிக்கையில்லை என்பதே 22 பதிலிறுப்பாளர்களுடனான நேர்முகங்காணல்களிலிருந்து பெறப்பட்ட பொதுவான அபிப்பிரயங்களாகும். ஒரு பதிலிறுப்பாளர் பின்வருமாறு விளக்கமளித்தார்: *“சாட்சியங்கள் பெறப்பட்ட பகுதிகளில் இராணுவம் ரோந்து சுற்றித்திரிந்தினால், அச்சத்தின் காரணமாக*

*தமது சாட்சியங்களை வழங்குவதற்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெரும்பான்மையானோர் முன்வராததினால் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை அறிக்கை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. மேலும், தமது சாட்சியங்களை அளிப்பதற்காக வந்தவர்கள் கூட மட்டுப்படுத்தப்பட்ட நேர காலம் போன்ற காரணங்களுக்காக அவ்வாறு செய்யமுடியாதவர்களாக விளங்கியதுடன், அவர்களது சான்றுகளை எழுதித்தருமாறு பதிலிறுப்பாளர்களிடம் கேட்கப்பட்ட உண்மையின் காரணமாக சிலரினால் சான்றுகளை வழங்க முடியாதிருந்தது.”*

விசாரணையின் நோக்கெல்லை ஒடுங்கியது என்றும், நகரப் பகுதிகளுக்கு மட்டுமே மட்டுப்பட்டிருந்தது என்றும், அறிக்கை பற்றி பின்தங்கிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு போதியளவு அறிவூட்டப்படவில்லை என்றும், ஜனாதிபதியினால் ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்ற உண்மையின் காரணமாக அதன் சுதந்திரம் சந்தேகத்திற்குரியது என்றும் பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டதனால், பொறிமுறையின் பயனுறுதித்தன்மையையிட்டு சந்தேகமிருந்தது.

அறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பில், யுத்தத்தின் போது சிவிலியன் மரணங்கள் (பாதுகாப்பு வலயத்தில் சிக்கி மரணமடைந்த சிவிலியன்கள் உட்பட) மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களினால் முகங்கொடுக்கப்பட்ட பிரச்சனைகள் ஆகியன தொடர்பிலான தகவலுக்கு போதியளவு கவனம் செலுத்தப்படவில்லையென சில பதிலிறுப்பாளர்கள் நம்புகின்றனர்.

# III

## கொழும்பின் விசாரணைகள்

கொழும்பில் LLRC விசாரணையில் சாட்சியங்கள் அளித்த 25 தனிப்பட்டவர்கள் இந்த அளவீட்டில் பதிலிறுப்பாளர்களாக விளங்கினார்கள்.

***பதிலிறுப்பாளர்களின் எதிர்பார்ப்பு***

பதிலிறுப்பாளர்களில் 12 பேருக்கு, நல்லிணக்கத்தையும், அபிவிருத்தியையும் நோக்கி தமது பங்களிப்பை செய்வதற்கே சாட்சியமளித்தார்கள் என்பதே பிரதான காரணங்களில் ஒன்றாகும் - குறிப்பாக நல்லிணக்க நடைமுறைக்கு மரியாதையைக் காட்டுதல், தேசிய சமாதானத்தின் காரணிக்காக அரசாங்கத்துடன் கைகளைக் கோர்ப்பதற்காக சமூகத்தின் இணக்கத்தினை காட்சிப்படுத்தல், நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்கு பங்களித்தல், நாட்டின் சமாதானத்திற்கும், ஐக்கியத்திற்கும் தடையொன்றாகவுள்ள உண்மைகளை வழங்குதல் அத்துடன் சுட்டிக்காட்டுதல்.

பதிலிறுப்பாளர்களின் ஏனைய எதிர்பார்ப்புக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன -

- *விதந்துரைப்புக்கள் தொடர்பிலான தனிப்பட்டவர்களின் கருத்துக்கள் ஏதோவொரு நாள் வெளியிடப்பட்டு அமுல்படுத்தப்படும் என்பதே LLRC அறிக்கை மீது*

*சாட்சிய கூற்றொன்றை வழங்குவதிலுள்ள தனிப்பட்ட நோக்கமாகும்*

- *பயங்கரவாதிகளினால் விளைவிக்கப்பட்ட அழிவு தொடர்பில் புள்ளிவிபரச் சான்றினை முன்வைத்தல். எனினும், சிங்கள மக்கள் பற்றி LLRC அறிக்கை பேசவில்லை.*

- *சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் வழங்குவதற் காகவும், இலங்கையில் சிறந்த சமூகமொன்றை உருவாக்குவதற்காகவும் ஜனாதிபதியில் செல்வாக்கு செலுத்துவதற்கு LLRCஇன் தலைவர் எதிர்பார்க்கப் படுகின்றார்.*

- *சிவில் யுத்தம் தொடர்பில் தமது அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளுதல்*

- *தமிழ்ச் சனசமூகம் பற்றிய பலதரப்பட்ட சார்த்துரைகள் தவறானவை என்பதை நிரூபித்தல் -உதாரணமாக தமிழ் சனசமூகத்திற்கு LLRC எதிரானது என்ற கோரல் - இது தவறானது என்பதை நிரூபித்தல்.*

- *கடந்த வருடங்களின் போது பெருமளவு அரசாங்கங் களினால் தமிழ் சனசமூகத்தை நோக்கி அதிகளவு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மையுணர்வுடன் உண்மையான உறவுகளை மேம்படுத்துவதற்கு உதவக்கூடிய உண்மைகளைச் சுட்டிக்காட்டுவதே இந்த சாட்சியக் கூற்றினை வழங்குவதிலுள்ள பிரதான நோக்கமாகும். சிறுபான்மையினர் தொடர்பில் கவனத்திற்கெடுக்கப்பட்டுள்ள விதந்துரைப்புக்கள் சிறந்தவை என்பதுடன், மேலும் தாமதமின்றி அவை அமுல்படுத்தப்பட வேண்டும்.*

- *தேசிய நெருக்கடிநிலைக்கு தீர்வொன்றைக் கண்டறிதல்.*

- *கோபமூட்டப்பட்ட தமிழர்களை, விசேடமாக இளைஞர்களை நோக்கி சிங்கள ஆட்சி அமைப்பு முறையினால் தைரியமான ஒரு தலைப்பட்ச சமிக்ஞையைத் தோற்றுவித்தல்.*


- *சர்வதேச சனசமூகம் ஆதரவை மட்டுமே அளிக்க முடியும். ஆனால், சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் வழங்க முடியாது. இலங்கையர்களினால் மட்டுமே சமாதானமும், நல்லிணக்கமும் வழங்கப்பட முடியும். குறிக்கோளைச் சாதிப்பதற்கான நடைமுறையொன்றை வழங்குவதற்கான பொறுப்பு LLRCஇன் மீது சரியாக சுமத்தப்பட்டிருந்தது. குறிப்பாக ஜனாதிபதியில் செல்வாக்கு செலுத்துவதில் தலைவர் இயலக்கூடியவராக விளங்குவார் என நான் எதிர்பார்க்கின்றேன்.*

தமது எதிர்பார்ப்புக்களை LLRC அறிக்கை நிறைவேற்றியுள்ளதாக 9 பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர், அது நிறைவேற்றவில்லை என 10 பேர் கூறிய அதேவேளை, அது ஓரளவுக்கு நிறைவேற்றியுள்ளதாக 3 பேர் தெரிவித்தனர்.

## *LLRC அறிக்கை மற்றும் விதந்துரைப்புக்கள்*


LLRC அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளதாக 25 பதிலிறுப்பாளர்களில் 21 பேர் அறிந்து வைத்திருந்தனர். பின்வரும் கூற்றுக்கள் வழங்கப்பட்டு, அறிக்கை தொடர்பில் அதிகளவில் அவர்கள் உடன்படுகின்ற கூற்றைத் தெரிவுசெய்யுமாறு பதிலிறுப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

***வரைபடம் 4 - பின்வரும் எந்தக் கூற்றுக்களுடன் நீங்கள் உடன்படுகின்றீர்கள்?***




அரச சார்பற்ற தாபனங்களிடமிருந்தும், இணைய தளத்திலிருந்தும், நேரடியாக LLRC பணியாளரிடமிருந்தும், நண்பர்களிடமிருந்தும் அல்லது தொழிலாற்றும் இடத்திலிருந்தும் அறிக்கையின் பிரதிகளை பதிலிறுப்பாளர்கள் பெற்றுள்ளனர்.

***வரைபடம் 5 - LLRC விதந்துரைப்புக்கள் பற்றி உங்கள் கருத்து என்ன? (ஒரு பதிலுக்கு மேற்பட்டதைத் தெரிவுசெய்ய முடியும்)***




விதந்துரைப்புக்கள் நடைமுறையிலானவை என பெருமளவு பதிலிறுப்பாளர்கள் நம்புகின்றனர் - தமது எதிர்பார்ப்புக்களை விதந்துரைப்புக்கள் மீறியுள்ளதாக சிலர் குறிப்பிட்ட அதேவேளை, முக்கியமான பிரச்சனைகளை விதந்துரைப்புக்கள் கவனத்திற்கெடுக்கவில்லை அல்லது சில மிகவும் தத்ரூபமானவையல்ல என சிலர் கூறினார்கள்.

விதந்துரைப்புக்கள் மீது அவர்களது கருத்திற்கான காரணங்களை விளக்குமாறு கேட்கப்பட்ட போது, பதிலிறுப்பாளர்களினால் பின்வருவன குறிப்பிடப்பட்டன.

- *அகதிகளின் மீள்-குடியேற்றம், தேர்தல்கள், கட்டமைப்பிலான அபிவிருத்தி ஆகியன தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும், நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் வெற்றியடைந்துள்ளன என்பதே காரணமாகும். இது அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஓர் ஆணைக்குழுவாகும். எனவே, அதில் குறிப்பிடப்பட்டுள்ள விதந்துரைப்புகளின் பிரகாரம் உண்மையாக நடந்து கொள்வதற்கு அரசாங்கம் பாத்திரவாளியாகும். எனினும், நாட்டில் அரசியல் தீர்வு தொடர்பிலான தீர்வுகள் முழுமையாகக் கவனத்திற்கெடுக்கப்படவில்லை.*

- *LLRC எதைப் பற்றியது என பொதுமக்கள் அறிந்திருக்கவில்லை. விபரங்களும் ஆழமாக இருப்பதனால் மக்களினால் விதந்துரைப்புக்களைப் புரிந்துகொள்ள முடியாதிருக்கின்றது. இது மிகவும் இலகுபடுத்தப்பட்ட வழியொன்றில் முன்வைக்கப்பட வேண்டும்.*

- *அறிக்கையொன்றையே நாம் எதிர்பார்த்தோம், மக்களின் சிந்தாந்தரீதியிலான மனப்பாங்கினை அல்ல.*

- *தமது சொந்தக் கருத்துக்களுக்கு ஏற்பட்ட அதிகார பரவலாக்கம் மீதான விதந்துரைப்புக்களை CPA மற்றும் NPC போன்ற சில அரச சார்பற்ற தாபனங்கள் வரையறுக்கின்ற அதேவேளை, அந்த விதந்துரைப்புக்களில் விரித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைக் கருத்திற்கு எடுக்கும் போது, அவை செயற்பாட்டினுள் இடப்பட முடியும் என்பதை நாம் காண்கின்றோம். சகல ஏனைய விதந்துரைப்புக்களும் அமுல்படுத்தப்பட முடியும்.*

- *பெரும்பாலானவை நடைமுறையிலானவை என்பதுடன், அர்ப்பணிக்கப்பட்ட தலைமைத்துவமொன்றால் அமுல்படுத்தப்படக்கூடியவையாகும்.*

- *முழு நடைமுறையையும் பற்றி நான் ஓரளவுக்கு குற்றங்குறை காண்பவன் என்பதனால், செய்யப்பட்டுள்ள ஆகக்குறைந்த சில விதந்துரைப்புக்கள் தமிழ் மக்களின் மனக்குறைகளைக் கவனத்திற்கெடுக்கும் என்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.*

- *சிங்களவர்களை நோக்கி இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் ஒன்றையுமே அறிக்கை கொண்டிருக்கவில்லை. இது ஒரு பாரதூரமான குற்றமாகும். சிங்கள மக்களுக்கு அதனால் விளைவிக்கப்பட்டுள்ள நேர்மையின்மையின் காரணமாக LLRC அறிக்கையுடன் என்னால் உடன்படமுடியாதிருக்கின்றது.*

- *நல்லிணக்கம் மற்றும் நல்லாட்சி ஆகியன தொடர்பிலான விதந்துரைப்புக்கள் திருப்திகரமானவையாகும். எனினும், உண்மைக்கும், வகைபொறுப்புக்கூறலுக்கும் தொடர்பான பகுதிகளில் சில குறைபாடுகள் உள்ளன.*

- *LLRCஇல் குறிப்பிடப்பட்டுள்ள சில விதந்துரைப்புக்கள் சிறுபான்மைச் சனசமூகங்களை மட்டும் இலக்குப்படுத்துவதுடன் (சில விதந்துரைப்புக்கள் தத்ரூபமானவையல்ல), இனத்துவ மோதல்கள் மீது வலியுறுத்துவதே காரணமாகும். மேலும், அதிகாரத்தைப் பங்கிடுதலின் விடயப்பொருள் சம்பந்தமில்லாததாகும்.*

- *உரியவாறு அமுல்படுத்தப்படக்கூடிய ஏதாவது விதந்துரைப்புக்கள் இருந்தால், அத்தகைய விதந்துரைப்புக்கள் அமுலாக்கப்பட வேண்டும். எனினும்,*

*அமுல்படுத்தப்பட முடியாத விதந்துரைப்புக்கள் இருந்தால், அவற்றை ஏன் அமுல்படுத்தப்பட முடியாது எனக் கண்டறிவது எமக்கு அவசியம் என்பதுடன், முறைமையொன்றை உருவாக்கி, அதைச் சுற்றி செயலாற்றுவதுடன், சர்வதேசச் சமுதாயத்திற்கு எமது முடிவுகளை முன்வைத்து, அவற்றின் நம்பிக்கையை ஈட்ட/கட்டியெழுப்ப வேண்டும்.*

- *சார்த்துரைக்கப்பட்ட யுத்தக் குற்றங்களை விசாரிப்பதற்கு அரசாங்கத்திற்கான அவசியத்தின் முக்கியமான பிரச்சனையை ஆணைக்குழு கவனத்திற்கெடுக்கவில்லை. எனினும், விசாரணை அலுவல் நியதியில் உள்ளடக்கப்படாத முக்கியமான துறைகளை - காணாமல் போனவர்களை அடையாளங் காணுதலுக்கும், இருப்பிடத்திற்குமான அவசரமான அவசியம், உயர் பாதுகாப்பு வலயங்களாக அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்ட ஆதனத்தையும், காணியையும் துரிதகதியில் மீளளித்தல், யுத்தத்தின் பின்விளைவொன்றாக உயிருக்கும், ஆதனத்திற்குமான அழிவுக்காக நாட்டுக்கு பகிரங்க மன்னிப்பொன்றை வழங்குவதற்கு அரசாங்கத்திற்கான அவசியம் ஆகியனவற்றை அவை உள்ளடக்கியுள்ளன.*

- *LLRCஇன் பெருமளவு விதந்துரைப்புக்களை அமுல்படுத்துவதற்கான மனவுறுதி இருந்தால் அவற்றை இலகுவில் அமுல்படுத்தலாம்.*

- *விசாரணைகளுக்கு முன் ஒரு சில ஆணையாளர்களின் அறிவிக்கப்பட்டுள்ள கூற்றுக்கள் மீதான அடிப்படையிலான அச்சங்கள் உண்மையான சூழ்நிலையை மதிப்பிடுவதற்காக செய்யப்பட்ட வெளித்தோற்றத்திலான*

*உண்மையான முயற்சிகளினால் பெரிதுமே சிதறவைக்கப்பட்டுள்ளன. வெளித்தோற்றத்திலான நன்மைபயக்கும் விதந்துரைப்புக்கள் திட்டவட்டத்தன்மையைக் கொண்டிருக்காததுடன், இது காலந்தாழ்த்தலுக்கும், தாமதத்திற்கும் மற்றும் இறுதியான உதாசீனத்திற்கும் இடத்தை விட்டுவைக்கின்றது. ஜெனரல் சரத் பொன்சேகாவைச் சட்டவிரோதமாக சிறைவைத்தமையும், முற்றிலும் நியாயமானதென்று வாதாட முடியாத 18ஆவது திருத்தமும் வெளிப்படையாக கவனத்திற்கெடுக்கப்படாதவையாகும்.*

***அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு***

LLRCஇன் விதந்துரைப்புக்களை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் முழுமையான அர்ப்பணிப்பைக் கொண்டது என அவர்கள் நம்புகின்றார்களா என பதிலிறுப்பாளர்களிடம் கேட்கப்பட்டது. ஆம் என்று 4 பதிலிறுப்பாளர்கள் மட்டுமே கூறிய அதேவேளை, இல்லை என்று 15 பேர் கூறினார்கள். அரசாங்கம் ஓரளவுக்கு முழுமையான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளதாக தாம் நம்புவதாக 6 பேர் கூறினார்கள்.

அகதிகளின் மீள்-குடியேற்றம், தேர்தல்கள், கட்டமைப்பிலான அபிவிருத்தி மற்றும் நிலக்கண்ணிவெடிகளை அகற்றுதல் ஆகியன தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் வெற்றியொன்றாக விளங்குவதன் காரணத்தினால் ஆம் என்று பதிலளித்த ஒரு பதிலிறுப்பாளர் அவ்வாறாக நம்பினார்.

இல்லை எனக் கூறியவர்கள் பின்வரும் காரணங்களைக் குறிப்பிட்டனர் -

- *LLRCஇல் குறிப்பிடப்பட்டுள்ள விதந்துரைப்புக்களை அமுல்படுத்துவதில் அரசாங்கம் அர்ப்பணிப்பினை/பொறுப்பினைக் கொண்டிருக்கவில்லை.*

- *இலகுவில் அமுல்படுத்தப்படக்கூடிய விதந்துரைப்புக்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக, தேசிய கீதம் இரு மொழிகளிலும் பாடப்படுவதில்லை. LLRCஇல் உள்ளவற்றுக்கு முழுமையாக மாறாக உள்ளவையே அமுல்படுத்தப்படுகின்றன. செயல் திட்டம் ஏதேனுமொன்றை முக்கியமானதைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன், LLRC அறிக்கையும் ஏதேனுமொன்றை உள்ளடக்கியிருக்கவில்லை.*

- *இதுவரை LLRCஇன் விதந்துரைப்புக்களை நிறைவேற்றுவதில் போதியளவு முன்னேற்றத்தை அரசாங்கம் காட்டவில்லை. இதுவரை எடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நடவடிக்கையும் அவசியப்பட்ட சீர்திருத்தங்களை தாம் அமுல்படுத்துவதாக உலகத்திற்கு காட்டுவதற்கான மேலெழுந்தவாரியான முயற்சியொன்று மட்டுமேயாகும்.*

- *சர்வதேசப் பாதுகாப்புக்கு அடிதாங்கியொன்றாக அதை வைத்திருப்பதுடன், குற்றச்சாட்டுக்களிலிருந்து எதிர்தாக்குதலுக்கு LLRC பயன்படுத்தப்படுகின்றது. அவர்கள் செயலணியொன்றை நியமித்துள்ளதுடன், வரவு-செலவுத்திட்டத்தில் நிதியங்களை ஒதுக்கீடு செய்துள்ளனர். ஆனால், அமுல்படுத்தல் நடைமுறையில் ஒரு போதுமே அக்கறை கொண்டிருக்கவில்லை.*

- *அதிமேன்மை தங்கியவரினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவொன்றாக இருப்பதனால் அறிக்கைக்கான பதிலிறுப்பு எதிர்பார்க்கப்பட்டது போன்றதல்ல. இறுதி அறிக்கை வெளியிடப்பட்ட உடனேயே குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் விதந்துரைப்புக்களை அரசாங்கம் அமுல்படுத்தும் என்ற அபிப்பிராயத்தில் இருந்தேன்.*

- *அரசாங்கம் LLRCஐ அமைத்தது சர்வதேசச் சமுதாயத்தைத் திருப்திப்படுத்த மட்டுமேயன்றி, நாடு முகங்கொடுக்கும் பிரச்சனைகளைக் கவனத்திற்கெடுப்பதற்கான ஏதாவது அர்ப்பணிப்பின் காரணமாக அல்ல. மேலும், அரசாங்கத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்கு அப்பால் LLRC விதந்துரைப்புக்கள் சென்றுள்ளதனால், தற்போதைய அரசாங்கம் அதை அமுல்படுத்தும் என்பதையிட்டு நான் சந்தேகப்படுகின்றேன்.*

**அரசாங்கம் அர்ப்பணிப்பினை ஓரளவுக்கு மட்டுமே கொண்டுள்ளது எனக் கூறிய பதிலிறுப்பாளர்கள் பின்வரும் காரணங்களை முன்வைத்தனர் -**

- *சர்வதேச அழுத்தத்தின் விளைவொன்றாக ஆணைக்குழு அமைக்கப்பட்டிருப்பதால் சர்வதேச செல்வாக்குக்கு இலங்கை பலியாகக்கூடும். எனவே, இது தொடர்பில் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மீது ஓரளவுக்கு சந்தேகமுள்ளது.*

- *அரசியலமைப்பில் உள்ள குறைபாடுகள் மற்றும் சிறுபான்மையினரால் முகங்கொடுக்கப்படும்*

*பிரச்சனைகளைக் கவனத்திற்கெடுத்தல் ஆகியன தொடர்பில் தெரியக்கூடிய நேரடியானதும், தெளிவானதுமான கொள்கைகள் அல்லது நடவடிக்கைகள் இல்லை. எனினும், சில வேறு பிரச்சனைகள் மீது, தெளிவான தீர்வுகளைக் கண்டறிவதற்கு முயற்சியொன்று எடுக்கப்படுகின்றது என்பதை எம்மால் காண முடிகின்றது.*

**அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு பற்றி தமக்குத் தெரியாது அல்லது நிச்சயமில்லை எனக் கூறிய பதிலிறுப்பாளர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:**

- *விதந்துரைப்புக்களை அமுல்படுத்துவதில் அரசாங்கம் அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளதா என எனக்கு தெரியாது, ஆனால் சகல விதந்துரைப்புக்களும் அமுல்படுத்தப்படுவது அவசியம் என நான் நம்பவில்லை. தமது ஆணைக்கு அப்பால் ஆணைக்குழு சென்றுள்ளதே இதற்குக் காரணமாகும்.*

- *அறிக்கையில் உள்ள விதந்துரைப்புக்களில் சில குறுகிய காலத்திலானதாக உள்ள அதேவேளை, சில நீண்ட காலத்திலானதாகும். விதந்துரைப்புக்களைச் செய்வதற்கான சுதந்திரம் LLRCக்கு வழங்கப்பட்டுள்ளதாக எம்மால் கூற முடியும். அவற்றை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி கட்டுப்பட்டவர் அல்லர். சில விதந்துரைப்புக்கள் அமுலாக்கப்பட்டுள்ளன. அவை அரசாங்கத்தின் ஊடாக, பாராளுமன்றத்தின் ஊடாக, நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் ஊடாக அமுல்படுத்தப்படுகின்றன. இலங்கை மீது எல்.ரி.ரி.ஈ.யும், தமிழ் தேசியவாதமும் கொண்டிருந்த சமூக-பொருளாதார தாக்கத்தினை LLRC அங்கீகரிக்கவில்லை.*

## *LLRC பற்றிய எண்ணங்கள்*

பதிலிறுப்பாளர்கள் சிலரினால் குறிப்பிடப்பட்ட LLRC பற்றிய சில எண்ணங்கள் பின்வருவனவாகும்

- *இதுவரை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட ஓர் உறுதியான நடவடிக்கையே LLRCயும், அதன் விதந்துரைப்புக்களுமாகும். விதந்துரைப்புக்களை அமுல் செய்வதனால் சிறந்த எதிர்காலமொன்றுக்கு அது வழியை அமைக்கும் என்பதனால் நாட்டின் பிரஜைகளுக்கு அனுகூலமொன்றாகும்.*

- *தேசமொன்றாக நாம் முகம்கொடுக்கும் பிரச்சனைகள் இந்தியர்கள் மற்றும் தென் ஆபிரிக்கர்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சனைகள் போன்றவை அல்ல. சிங்களவர்கள் பற்றி ஒரு சொல்லைக் கூட LLRC அறிக்கை குறிப்பிடவில்லை. எல்.ரி.ரி.ஈ.ஐக் கட்டியெழுப்புவதற்கு மேற்கத்தைய தேசங்களின் முயற்சிகள் பற்றி அறிக்கை குறிப்பிடவில்லை. இவ்வறிக்கை தமிழ் தேசியவாத சித்தாந்தத்திலான கண்ணோட்டமொன்றிலிருந்தே எழுதப்பட்டுள்ளது.*
- *LLRC அறிக்கை சிவில் சமூகத்திற்கு கற்பித்தல் கருவியொன்றாக இருக்கவேண்டும். உயர்ந்தளவு நுண்ணறிவையும், உயர்ந்த பதவிநிலைகளை வகித்தவர்களையும் கொண்டவர்களை LLRC உள்ளடக்கியுள்ளது. மிதமான கருத்துக்களை அறிக்கை அடக்கியுள்ளது. இது சமூகத்தில் மறைந்துள்ள ஏதோவொன்றாகும் என்பதுடன், இது வெளியே கொண்டு வரப்பட வேண்டும்.*

- *LLRCஇல் குறிப்பிடப்பட்டுள்ள விதந்துரைப்புக்கள் நாட்டில் இனத்துவ நெருக்கடிநிலையைத் தீர்ப்பதற்கு கிட்டியதாக ஒன்றுமில்லை. எனவே, பயனற்ற விதந்துரைப்புக்களையிட்டு கலந்துரையாடுவதற்கு நேரத்தை எடுப்பதற்குப் பதிலாக, நாட்டின் தமிழர்களினால் முகங்கொடுக்கப்படும் கஷ்டங்களுக்கும், நியாயமின்மைகளுக்குமான தீர்வுகளைக் கண்டறிந்து, கலந்துரையாடுவதே சிறந்ததாகும்.*

- *வடக்குக்கும், கிழக்குக்கும் வெளியே உள்ள பகுதிகளில் சிங்கள மொழி தொடர்பில் தமிழ்ப் பிரஜைகள் முகங்கொடுக்கும் பிரச்சனைகளையிட்டு உதவி செய்வதற்காக அரசாங்க அலுவலகங்களுக்கு மொழிபெயர்ப்பாளர்களை வழங்குவதற்கு அறிக்கையில் விதந்துரைப்புக்கள் உள்ளன. எனினும், வடக்கிலும், கிழக்கிலும் உள்ள அரசாங்க அலுவலகங்களில் நிருவாக மொழி தமிழ் மொழி என்பதுடன், இது அப்பகுதிகளில் வாழும் சிங்களவர்களுக்கு கஷ்டங்களை விளைவிக்கின்றது. இது தொடர்பில் மொழிபெயர்ப்பாளர்களை வழங்குவதற்கு விதந்துரைப்புக்கள் செய்யப்படவில்லை. மேலும், உள்நாட்டில் இடம்பெயர்ந்த தமிழர் மற்றும் முஸ்லிம்கள் தொடர்பில் தகவலை LLRC முன்வைத்துள்ளது. ஆனால், உள்நாட்டில் இடம்பெயர்ந்த சிங்களவர்களையிட்டு குறிப்பிடவில்லை. அதிகாரத்தைப் பங்கிடுதல் மற்றும் சுதந்திரமான ஆணைக்குழுக்களை அமைத்தல் போன்ற ஆணைக்கு தொடர்பற்ற விதந்துரைப்புக்களையும் LLRC உள்ளடக்கியுள்ளது.*

- *இது ஒரு நியாயமான அறிக்கை என தனிப்பட்டரீதியில் நான் உணர்கின்றேன். தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள சனசமூகங்கள் மத்தியில் ஐக்கியத்தைப் பலப்படுத்துவது எமக்கு அவசியமாகும். இந்த இனத்துவச் சனசமூகங்கள் மத்தியில் ஏதாவது வகையிலான பிளவுக்கான வாய்ப்பு இருக்கக்கூடாது.*

- *விசாரணை அலுவல் நியதியினால் கடுமையானளவு கட்டாயப்படுத்தலும், அரசாங்க உறுப்பினர்களின் நெருங்கிய விசுவாசமும் இருந்த போதிலும், LLRC விதந்துரைப்புக்கள் பாரபட்சமானவையாகும். எனினும், யுத்தக் குற்றங்களின் முக்கிய பிரச்சனையைத் தவிர்ப்பதற்கு அவர்கள் தெரிவுசெய்துள்ளனர். இது பாரதூரமான தவிர்ப்பொன்றாகும்.*

- *9 மதகுருமார்கள், விசேடமாக 2009 மே மாதத்தில் யுத்தத்தின் பின்னர் சரணாகதியடைந்த வண.பிதா பிரான்சிஸ் ஜோசப் காணாமல்போனமை பற்றி நான் பேசியுள்ளேன். அவரை முகாமில் மக்கள் கண்டுள்ளதுடன், ஆனால் தற்போது அவர் காணாமல் போயுள்ளார். மீட்டளிக்கின்ற நீதியின் கருத்துரு பற்றி நான் பேசினேன் - இது பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈட்டினைச் செலுத்துவதுடன், குற்றமிழைத்தவர்களைக் கண்டித்துள்ளது. ஆனால், இந்த விதந்துரைப்புக்கள் இறுதி அறிக்கையில் வெளிப்படவில்லை. எனது விதந்துரைப்புக்களுடன், தேசிய நெருக்கடிநிலைக்கு தீர்வொன்றை நான் எதிர்பார்த்துள்ளேன்.*

- *அமுலாக்கலில் அரசாங்கம் அக்கறையைக் கொண்டிருக்காத போதிலும், அரச சார்பற்ற தாபனங்கள் இவற்றை அடிமட்டத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். அமுலாக்கல் நடைமுறையில் சமயத் தலைவர்கள் அக்கறை எடுப்பதை நான் பார்க்கவில்லை என்பதுடன், அது பற்றி அவர்களை ஆர்வமூட்டுவது அவசியமாகும். இதனால் அவர்கள் பதிலுக்கு ஒழுங்குமுறையை எடுக்கக்கூடும்.*

- *LLRCஇன் விதந்துரைப்புக்கள் ஒரு ஆரம்ப முனையாகும். இது இலங்கை சரியாக விடயங்களை இடுவதற்குத் தயாராகவுள்ளது என சர்வதேச சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டும். சமய சகிப்புத்தன்மையின் பிரச்சனையை எனது சாட்சியத்தில் நான் முனைவுபடுத்தியுள்ளேன். இன்று இது முன்னணிக்கு வந்துள்ளது. இந்த விடயம் மிகவும் ஆழமான விதத்தில் பார்க்கப்படுவது முக்கியமானதாகும் அல்லது 2009இல் முடிவுக்கு வந்த 30 வருட யுத்தத்தை விட விளைவு மிக பாரியளவிலானதாக விளங்கும்.*

- *தம்மால் நியமிக்கப்பட்ட செயற்பணியைச் சாதிப்பதற்கு மட்டுமல்ல, ஆனால் சர்வதேசரீதியில் இலங்கையின் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் அத்துடன் தற்போது சீர்திருத்தப்பட்டுள்ள நாடொன்றாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும் வரைச்சட்டமொன்றையும், மூலோபாயமொன்றையும் LLRC ஆணையாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். எனினும், இன்றுவரை தமது முட்டாள்தனமான பதிலிறுப்பு மூலோபாயத்தினால் தலைவர்கள் ஓடத்தைத் தவறவிட்டுள்ளனர்.*

- *தமிழ் தீவிரவாதத்திற்கு ஓரளவுக்கு முழு அளவொன்றில் சமூகம், விசேடமாக சிங்கள உயர் குழாத்தினர் பொறுப்பாவர் என்ற கருத்தினை LLRC தோற்றுவிக்கும் என நான் விரும்பினேன். இந்த கூட்டுச் சேர்ந்த குறைகூறத்தக்க நிலையிலான உணர்விலேயே இது ஜே.வி.பி.இன் புனர்வாழ்வுக்கும், எமது சமூகத்தில் கிராமியச் சிங்கள இளைஞரின் அதிகளவிலான உள்ளடக்கத்திற்கும் இட்டுச் சென்றுள்ளது. LLRC அறிக்கையின் பின்னர் இத்தகைய பரந்த சமூகப் பொறுப்பின் உணர்வு இல்லை (அல்லது மிகச் சிறிதளவு) என்பதுடன், தமிழ் மக்கள் அந்நியப்பட்டுவிட்டோம் என்று தொடர்ந்துமே உணர்கின்றனர்.*

- *நல்லிணக்கத்திற்கும், சமாதானத்திற்கும் என குறிப்பாக LLRC தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அவை எம்மை விட்டு விலகிச்செல்வதாகவே தெரிகின்றது. 30 வருட யுத்தத்தின் போது, நிலவியதை விட நடைமுறையிலான சூழ்நிலை அரிதாகவே சிறந்ததாக விளங்குகின்றது. அரசாங்கம் கவனியாது விட்டுள்ள (ஆதரவளிக்கப்படாவிட்டால்) பயங்கரவாதம் எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதத்தை பதிலீடு செய்துள்ளதை நம்புவதற்காக ஒருவரைக் குற்றம் கூறமுடியாது. LLRCஇன் இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள திட்டவட்டமான விதந்துரைப்புக்கள் மீது கருத்தாழமிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தமது இறுதி விதந்துரைப்புக்கள் ஏதேனும் வித்தியாசமாகக் கருதப்படும் என LLRC நேர்மையாகவே நம்பியதா?*


# IV

## LLRC செயலமர்வுப் பங்கெடுப்பாளர் அளவீடு

24 மாவட்டங்களைச் சேர்ந்த 1,440 செயலமர்வுப் பங்கெடுப்பாளர்களின் கருத்துக்கள் பின்வருவனவாகும். அவர்களின் வயதுக் குழுக்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| 21 வயதிற்குக் கீழ் | : | 11.3% |
| வயது 21 - 35 | : | 39.6% |
| வயது 36 - 50 | : | 31.7% |
| வயது 50 - 65 | : | 14.3% |
| வயது 65 மற்றும் அதற்கு மேல் | : | 3.1% |


***இந்த செயலமர்வுக்கு முன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் உங்கள் அக்கறையை எக்கூற்று சிறந்த விதத்தில் விபரிக்கின்றது?***



செயலமர்வுக்கு முன்னர் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் சிறிதளவு அக்கறையொன்றையே பெரும்பாலான பங்கெடுப்பாளர்கள் (44.4%) கொண்டிருந்த அதேவேளை, அதிகளவு அக்கறையை தாம் கொண்டிருந்ததாக 24.9%இனர் தெரிவித்தனர்.

மாவட்டரீதியாக LLRCஇல் அதிகளவு அக்கறையைக் கொண்ட செயலமர்வுப் பங்கெடுப்பாளர்கள் கிளிநொச்சி (43.3%), மன்னார் (55%) மற்றும் முல்லைத்தீவு (55%) ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர். கம்பஹா (56.7%), களுத்துறை (56.7%) மற்றும் மாத்தளை (46.7%) ஆகிய மாவட்டங்களிலிருந்து அதிக சதவீதத்திலான பங்கெடுப்பாளர்கள் செயலமர்வுக்கு முன்னர் LLRCஇல் தாம் அக்கறையைக் கொண்டிருக்கவில்லை என தெரிவித்தனர்.

***LLRC விதந்துரைப்புக்களின் அமுலாக்கத்திற்கு அரசாங்கத்தின் செயல் திட்டம் போதுமானதல்ல என சிலர் கூறுகின்றனர். நீங்கள் உடன்படுகின்றீர்களா?***




இறுதி LLRC விதந்துரைப்புக்கள் குறித்த அறிக்கைக்கு பதிலிறுப்பாக 2012 ஜூலையில் “LLRCஇன் விதந்துரைப்புக்களை அமுல்படுத்துவதற்கான தேசிய செயல் திட்டம்” ஒன்றை இலங்கை அரசாங்கம் வெளியிட்டது. சர்வதேச மனிதாபிமானச் சட்டம், மனித உரிமைகள், காணியை மீளளித்தல் மற்றும் மீள்குடியேற்றம், புதுப்பித்தல்/நஷ்டஈட்டிலான நிவாரணம் மற்றும் மீளிணக்கம் ஆகிய ஐந்து கருப்பொருள்களின் கீழ் செயல் திட்டம் வகைப்படுத்தப்பட்டுள்ளது. செயற்பாடுகள், முக்கிய பொறுப்பிலான முகவராண்மை, முக்கிய செயற்றிறன் காட்டி, மற்றும் ஒவ்வொரு செயற்பாட்டுக்கான கால வரைச்சட்டம் ஆகியனவற்றை தெரிவுசெய்யப்பட்ட விதந்துரைப்புக்களுக்கான அமுலாக்கல் விபரங்கள் உள்ளடக்குகின்றன.

LLRC விதந்துரைப்புக்களை அமுல்படுத்துவதற்கான அரசாங்கத்தின் செயல் திட்டம் போதுமானவை அல்ல என பெரும்பான்மையிலான செயலமர்வுப் பங்கெடுப்பாளர்கள் நம்புவதுடன், இது போதுமானதல்ல என முழுமையாக உடன்படுவதாக அநேகமாக 30 சதவீதத்தினர் குறிப்பிட்டனர்.

செயல் திட்டத்தில் ஆகக்குறைந்தளவு நம்பிக்கையுடனான பங்கெடுப்பாளர்கள் மன்னார் (73.3%), கம்பஹா (55%) மற்றும் கிளிநொச்சி (51.7%) ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாக உள்ள அதேவேளை, அம்பாறை, மாத்தறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 20%ஐக் கொண்ட பங்கெடுப்பாளர்கள் தேசிய செயல் திட்டம் போதுமானதல்ல என்ற கூற்றினையிட்டு தாம் உடன்படவில்லை எனக் குறிப்பிட்டனர்.

[1] http://www.priu.gov.lk/news_update/Current_Affairs/ca201207/National%20Plan%20of%20Action%20_%20LLRC.pdf

***LLRCஇன் விதந்துரைப்புக்களை அமுல்படுத்துவதில் முழுமையான அர்ப்பணிப்பை இலங்கை அரசாங்கம் கொண்டுள்ளது என நீங்கள் நினைக்கின்றீர்களா?***





LLRCஇன் விதந்துரைப்புக்களை அமுல்படுத்துவதில் அரசாங்கம் முழுமையான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளது என அனேகமாக 50 சதவீதத்தைக் கொண்ட செயலமர்வுப் பங்கெடுப்பாளர்கள் நினைக்கவில்லை. அவ்வாறு அவர்கள் ஏன் நினைக்கின்றார்கள் என கேட்கப்பட்ட போது, இறுதி LLRC அறிக்கையின் மொழிபெயர்ப்புக்கள் சிங்களத்திலும், தமிழிலும் கிட்டச்செய்யப்படவில்லை, விதந்துரைப்புக்கள் அமுல்படுத்தப்படும் என்பதற்கான உருப்படியான சான்று இல்லை, மற்றும் அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் ஆணைக்குழுக்களிலும், அறிக்கைகளிலும் பொதுவாகவே நம்பிக்கையின்மை போன்ற காரணிகளைப் பதிலிறுப்பாளர்கள் வழங்கினார்கள்.

மாவட்டரீதியில் கருத்துக்களைப் பார்க்கும் போது விதந்துரைப்புக்களை அமுல்படுத்தவதில் அரசாங்கம் முழுமையான அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளது என மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 88.3%ஐக் கொண்ட பங்கெடுப்பாளர்கள் நினைக்காத அதேவேளை, இதனுடன் கிளிநொச்சியிலிருந்து 81.7%இனரும், நுவரெலியாவிலிருந்து 70%இனரும் உடன்படுகின்றனர். விதந்துரைப்புக்களை அமுல்படுத்துவதில் அரசாங்கம் அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளது என நினைப்பவர்களில் உயர்

சதவீதத்தினர் திருகோணமலை (28.3%), மொனராகலை (25%) மற்றும் கேகாலை (23.3%) ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர்.

**விதந்துரைப்புக்களின் அமுலாக்கத்திற்கு யதார்த்தபூர்வமான நேரகாலம் ஒன்று எது என நீங்கள் நினைக்கின்றீர்கள்?**




விதந்துரைப்புக்களின் அமுலாக்கத்திற்கான யதார்த்தபூர்வமான நேரகாலம் ஒன்று குறித்து செயலமர்வுப் பங்கெடுப்பாளர்கள் ஓரளவுக்கு பிளவுபட்டிருந்தனர். ஒரு வருடத்திற்கு குறைவான காலமென சுமார் 20%இனர் தெரிவித்தனர், ஒன்றிலிருந்து இரண்டு வருடங்கள் என 21.6%இனர் தெரிவித்தனர், இரண்டிலிருந்து ஐந்து வருடங்கள் என மேலும் 20% இனர் தெரிவித்தனர்.

ஆறு மாதங்களுக்கு குறைவான காலமென மன்னாரைச் சேர்ந்த 36.7%ஐக் கொண்ட செயலமர்வு பங்கெடுப்பாளர்கள் தெரிவித்தனர், ஒரு வருடத்திற்கு குறைவான காலமென மன்னாரிலிருந்து மேலும் 35%இனர் தெரிவித்தனர், ஒன்றிலிருந்து இரு வருடங்கள் என மொனராகலையிலிருந்து 36.7%இனர் தெரிவித்தனர், இரண்டிலிருந்து ஐந்து வருடங்கள் என கண்டி மாவட்டத்திலிருந்து 46.7%இனர் தெரிவித்தனர், மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேல் என இரத்தினபுரியிலிருந்து 66.7%இனர் தெரிவித்தனர்.

# V

## இணைப்பு

### LLRC ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியம் அளித்த நபர்களுக்கு வழங்கப்படும் வினாக்கொத்து

D1 வயது :…………………………………………………

D2 ஆண் / பெண் :…………………………………………………

D3 வதிவிட மாவட்டம் :…………………………………………………

1. நிகழ்காலச் சமூகத்தில் தற்போது முகங்கொடுக்கும் கடுமையான பிரச்சினைகள் மூன்றைக் குறிப்பிடுக.

   a. ………………………………………………………………………………………

   ………………………………………………………………………………………

   b. ………………………………………………………………………………………

   ………………………………………………………………………………………

   c. ………………………………………………………………………………………

   ………………………………………………………………………………………

2. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் LLRC உள்ளடக்கம் நீங்கள் நினைக்கும் விதத்தில் யாது?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

3. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு பற்றி நீங்கள் முதலில் எவ்வாறு அறிந்து கொண்டீர்கள்?

a. ஊடகங்கள் மூலம்

b. குடும்ப அங்கத்தவர் ஒருவர் மூலம் / நண்பர் மூலம்

c. அரச சார்பற்ற நிறுவனத்தின் மூலம் / பொதுமக்கள் குழுவின் மூலம்

d. வேறு வழிகளில் (குறிப்பிடவும்)

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

4. நீங்கள் அறிக்கை LLRC தொடர்பான செய்திகளையும் மற்றும் புதிய தகவல்களையும் பெற்றுக் கொள்ளும் பிரதான மார்க்கம் எது? (ஊடகங்களின் மூலம் எனில், செய்தித்தாள், தொலைக்காட்சி, வானொலி அலைவரிசைகளைக் குறிப்பிடவும்)

.........................................................................................................

.........................................................................................................

.........................................................................................................

.........................................................................................................

.........................................................................................................

5. LLRC ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பகிரங்கப்படுத்தப் பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்களா?
    a. ஆம்
    b. இல்லை

6. கீழ்வரும் கூற்றுக்களில் எதற்கு நீங்கள் உடன்படுகின்றீர்கள்?
    a. LLRC அறிக்கையை முழுமையாக அல்லது கூடியளவு வாசித்தேன்.
    b. LLRC அறிக்கையில் உள்ளடங்கியுள்ளவற்றை பற்றி புத்தகமொன்றின் மூலம் அல்லது ஆவணம் ஒன்றின் மூலம் முழுமையாக அல்லது கூடியளவு வாசித்தேன்.
    c. LLRC அறிக்கையில் எனக்குத் தொடர்பான அல்லது உடன்பாடான பகுதியை மட்டும் வாசித்தேன்.
    d. LLRC அறிக்கை பற்றி நான் ஆர்வம் செலுத்தும் அல்லது உடன்பாடான பகுதியை மட்டும் வாசித்தேன்.

e. LLRC அறிக்கையை நான் வாசிக்கவில்லை. ஆனால் அதில் அடங்கியுள்ள அனைத்து விடயங்களையும் அல்லது பெரும்பாலான விடயங்களை மற்றவர்களிடம் / ஊடகங்களின் மூலம் அறிந்து கொண்டேன். (8 ஆம் வினாவைப் பார்க்கவும்)

f. LLRC அறிக்கையை நான் வாசிக்கவில்லை. ஆனால் அதில் எனக்கு உரித்தான பகுதிகளை / நான் ஆர்வம் செலுத்தும் பகுதிகளை மற்றவர்களிடம் இருந்து / ஊடகங்களின் மூலம் அறிந்து கொண்டேன். (8 ஆம் வினாவைப் பார்க்கவும்)

g. LLRC அறிக்கையில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் நான் யாதும் அறியவில்லை. (8 ஆம் வினாவைப் பார்க்கவும்)

7. LLRC அறிக்கை, புத்தகம் அல்லது ஆவணம் உங்களுக்கு எவ்வாறு கிடைத்தது?

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

8. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணையாளரிடம் நீங்கள் சாட்சியங்களை வழங்கும் போது நீங்கள் எதிர்பார்த்தது என்ன?

.....................................................................................................

.....................................................................................................

...........................................................................................................

...........................................................................................................

...........................................................................................................

...........................................................................................................

9. LLRC ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை உங்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றியதா?
   a. ஆம்   b. இல்லை   c. அதில் அடங்கியுள்ளவற்றை நான் அறியமாட்டேன்

10. LLRC பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் முழுமையாக அர்ப்பணிப்புடன் உள்ளதாக நீங்கள் நினைக்கிறீர்களா?
    a. ஆம்
    b. இல்லை
    c. தெரியாது / திட்டவட்டமான கருத்து எதுவும் இல்லை

11. நீங்கள் 10 ஆவது வினாவுக்கு அளித்த விடையை தயவு செய்து தெளிவுபடுத்த முடியுமா?

...........................................................................................................

...........................................................................................................

...........................................................................................................

...........................................................................................................

...........................................................................................................

12. LLRC பரிந்துரைகள் தொடர்பாக உங்கள் அபிப்பிராயம் என்ன? (ஒன்றிக்கு மேல் தெரிவு செய்து கொள்ளலாம்)

a. இவற்றை நடைமுறைப்படுத்த முடியும்.
b. சில விடயங்கள் அவ்வளவு யதார்த்தமானவையல்ல.
c. எனது எதிர்பார்ப்பைத் தாண்டிச் சென்றுள்ளது.
d. நான் எதிர்பார்த்ததை விடக் குறைவு
e. கடினமான சில பிரச்சினைகள் இங்கு உள்ளடக்கப்படவில்லை / பேசப்படவில்லை / போதியளவு பேசப்படவில்லை.
f. இதில் சிலவற்றை மாத்திரம் நடைமுறைப்படுத்த முடியும்.
g. பரிந்துரைகள் என்னவென்று நான் அறியவில்லை.

13. தயவுசெய்து மேலே 12 ஆம் வினாவுக்கு நீங்கள் வழங்கிய விடையை தெளிவுபடுத்துங்கள்?

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

14. LLRC பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் முன்வைத்துள்ள செயற்பாட்டுத் திட்டம் போதாது என்று சிலர் கூறி வருகின்றனர். நீங்கள் அதற்கு உடன்படுகின்றீர்களா?

a. முழுமையாக உடன்படுகிறேன்.
b. ஓரளவு உடன்படுகிறேன்.
c. உடன்படவும் இல்லை உடன்படாமலும் இல்லை.
d. ஒரு வகையிலும் உடன்பாடு இல்லை.
e. முழுமையாக உடன்படவில்லை.
f. அரசாங்கத்தின் செயற்பாட்டுத் திட்டம் தொடர்பாக நான் அறியவில்லை.

15. LLRC அறிக்கை தொடர்பாக வேறு விமர்சன ரீதியான கருத்துக்கள் இருப்பின் அவற்றைக் குறிப்பிடவும்.

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................

# LLRC செயலமர்வில் கலந்து கொண்டவர்க்கு வழங்கப்படும் வினாக்கொத்து

D1 வயது :.............................................

D2 வதிவிட மாவட்டம் :.............................................

D3 தொழில் :.............................................

01 இந்தச் செயலமர்வில் கலந்து கொள்வதற்கு முன்னர், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களுள் எக்கூற்று மூலம் உங்களுக்கு இருந்த ஆர்வம் மிகச் சரியாக வெளிப்படுகிறது?

d. அதீத ஆர்வம் b. சிறு ஆர்வம்

c. எவ்விதமான ஆர்வமும் இருக்கவில்லை

02 LLRC பரிந்துரைகள் பற்றி உங்களது கருத்து என்ன? (ஒன்றிற்கு மேற்பட்டவற்றைத் தெரிவு செய்யலாம்).

a. இவற்றை நடைமுறைப்படுத்த முடியும்.
b. சில பரிந்துரைகள் நடைமுறைச்சாத்தியமற்றவை.
c. என்னுடைய எதிர்பார்ப்புக்களை எஞ்சிச் சென்றுள்ளது.
d. நான் எதிர்பார்த்ததை விடக் குறைவு
e. அவை கடினமான சில பிரச்சினைகள் பற்றிக் கவனம் செலுத்தவில்லை / அல்லது போதியளவு கவனம் செலுத்தவில்லை
f. பரிந்துரைகளில் ஒரு சிலவற்றை மாத்திரம் நடைமுறைப்படுத்த முடியும்.
g. LLRC பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தத் தேவையில்லை.

h. நான் LLRC பரிந்துரைகள் என்னவென்று அறிந்திருக்கவில்லை.
i. எனக்குத் தெரியாது / நிச்சயமில்லை

03 மேலே (2ஆம்) வினாவிற்கு நீங்கள் வழங்கிய விடையை சற்றுத் தெளிவுபடுத்தவும்.

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

04 LLRC பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முன்வைத்துள்ள செயற்பாட்டுத் திட்டம் போதாது என்று சிலர் கூறி வருகின்றனர். நீங்கள் அதற்கு உடன்படுகின்றீர்களா?
a. முழுமையாக உடன்படுகிறேன்.
b. ஓரளவு உடன்படுகின்றேன்.
c. உடன்பாடோ உடன்படாமையோ இரண்டும் இல்லை.
d. ஓரளவுக்கு உடன்படவில்லை.
e. முழுமையாக உடன்படவில்லை.
f. அரசாங்கத்தின் செயற்பாட்டுத் திட்டம் தொடர்பாக நான் அறியவில்லை.

05 உங்கள் கருத்துப்படி LLRC அறிக்கையின் மிகவும் முக்கிய பரிந்துரை என்ன?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

06 LRC பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் முழுமையாக தன்னை அர்ப்பணித்துள்ளது என நீங்கள் நினைக்கிறீர்களா?

a. ஆம்

b. இல்லை

c. எனக்குத் தெரியாது / திட்டவட்டமான கருத்தென்று இல்லை

07 மலே வினா 6 இற்கு நீங்கள் வழங்கிய விடையை சற்றுத் தெளிவுபடுத்த முடியுமா?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

08 உங்கள் கருத்துப்படி பரிந்துரைகளை நடைமுறைப்படுத்து வதற்கு அவசியமான உண்மையான கால எல்லை எது?

a. ஆறு மாதத்துக்கும் குறைவான காலப் பகுதி
b. ஒரு வருடத்தை விடக் குறைவான காலப் பகுதி
c. ஒரு வருடத்தில் அல்லது இரண்டு வருடத்தில்
d. இரண்டு வருடங்கள் முதல் ஐந்து வருட கால எல்லையுள்
e. ஐந்து வருடத்துக்கு மேற்பட்ட காலத்தில்

09 பின்வரும் கூற்றுக்கள் LLRC அறிக்கையை மொழிபெயர்ப்பது சம்பந்தமாகும். நீங்கள் கூடுதலாக உடன்படும் கூற்றைத் தெரிவு செய்க.

a. LLRC அறிக்கையின் சிங்களம், தமிழ் ஆகிய மொழி பெயர்ப்புகளை 2011 டிசம்பரில் இலங்கை அரசாங்கம் வெளியிட்டது.
b. LLRC அறிக்கையின் சிங்கள – தமிழ் மொழிபெயர்ப்புக்கள் ஆங்கில அறிக்கை வெளியிடப்பட்டு ஒரு மாதத்தின் பின் வெளியிடப்பட்டன.
c. LLRC அறிக்கையின் சிங்கள – தமிழ் மொழி பெயர்ப்புக்கள் ஆங்கில அறிக்கை வெளியிடப்பட்டு ஆறு மாதங்களின் பின் வெளியிடப்பட்டன.
d. LLRC அறிக்கையின் சிங்கள – தமிழ் மொழி பெயர்ப்புக்கள் ஆங்கில அறிக்கை வெளியிடப்பட்டு எட்டு மாதங்களின் பின் வெளியிடப்பட்டன.
e. LLRC அறிக்கையின் சிங்கள – தமிழ் மொழி பெயர்ப்புக்கள் ஆங்கில அறிக்கை வெளியிடப்பட்டு ஓராண்டிற்குப் பின்னர் வெளியிடப்பட்டன.
f. LLRC அறிக்கையின் சிங்கள–தமிழ் மொழி பெயர்ப்புக்கள் அரசாங்கத்தால் இதுவரை வெளியிடப்படவில்லை.
g. தெரியாது / திட்டவட்டமான கருத்து இல்லை.

10 LLRC அறிக்கை பற்றி மேலதிகமாக உங்களுக்கு ஏதாவது கருத்து இருந்தால் கீழே குறிப்பிடவும்.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................




க்லோப் பிரின்டிங் வர்க்ஸ் 5A, ஸ்டோர்க் ஒழுங்கை, கொழும்பு-10, 0777-315971

ISBN : 978-955-4746-05-3